ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *People's feelings and struggles in the novel Thotiyin Makan*

***Dr. V. Meenakshi,****Assistant Professor, (Tamil),Department of Science and Humanities,*

*Karpagam College of Technology,Coimbatore* 641105 https://orcid.org/0009-0007-2635-9715

***Abstract:***

*The novel profoundly records the sorrows and struggles of three generations of Dalit people engaged in sanitation work in Alappuzha, Kerala. It reflects the multifaceted dimensions of the social and existential struggles of the oppressed and marginalized community. One could say that "Thottiyude Makan" embodies every possible human emotion—love, hatred, anger, desire, lust, affection, deceit, betrayal, suffering, cruelty, sorrow, death, pride, compassion, prejudice, fear, tears, lamentation, slavery, hunger, starvation, disease, famine, and inferiority complex. The purpose of this paper is to analyze and interpret these diverse emotional and social dimensions depicted in the novel.*

***Keywords:***

*Thakazhi Sivasankara Pillai; Thottiyude Makan; Dalit Literature; Social Realism; Marginalized Communities; Caste and Class Conflict; Psychological Struggles; Modern Malayalam Novel.*

## தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும்

**முனைவர் வ.மீனாட்சி,** உதவிப் பேராசிரியர், (தமிழ்), அறிவியல் மற்றும் மனிதநேயத் துறை,

கற்பகம் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் 641105 https://orcid.org/0009-0007-2635-9715

**ஆய்வுச்சுருக்கம்:**

கேரளாவின் ஆலப்புழையில் துப்புரவுத் தொழில் செய்யும் மூன்று தலைமுறை தலித் மக்களின் துயரமான வாழ்வியலையும், சமூகப் போராட்டங்களையும் ஆழமாகப் பதிவு செய்கிறது. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட அந்தச் சமூகத்தின் வாழ்வியல் போராட்டங்கள் பல பரிமாணங்களில் வெளிப்படுகின்றன. தோட்டியின் மகன் நாவலில் இல்லாத உணர்வே இல்லை என்று சொல்லலாம். அன்பு, வெறுப்பு, கோபம், தாபம், காமம், காதல், பாசம், வேஷம், வஞ்சம், துன்பம், கொடுமை, சோகம், இறப்பு, பெருமை, நெகிழ்வு, காழ்ப்புணர்ச்சி, பயம், அழுகை, கதறல், அடிமை, பசி, பட்டினி, நோய், பஞ்சம், தாழ்வு மனப்பாங்கு இன்னும் இன்னும் இருப்பதை எல்லாம் அடக்கலாம். அவற்றை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** தகழி சிவசங்கர பிள்ளை; தோட்டியின் மகன்; தலித் இலக்கியம்; சமூக யதார்த்தவாதம்; ஒதுக்கப்பட்ட சமூகங்கள்; சாதி மற்றும் வர்க்க மோதல்; உளவியல் போராட்டங்கள்; நவீன மலையாள நாவல்.

**முன்னுரை:**

தகழி சிவசங்கரப் பிள்ளை அவர்களால் 1947 ஆம் ஆண்டு எழுதப்பட்ட மலையாள நாவல் 'தோட்டியின் மகன்', கேரளாவின் ஆலப்புழையில் மலமள்ளும் தொழிலில் ஈடுபட்டிருந்த தோட்டிகளின் சமூக, பொருளாதார, உளவியல் வாழ்வை நுட்பமாகச் சித்தரித்துள்ளது. தமிழ் வாசகர்களுக்குச் சுந்தர ராமசாமி மொழிபெயர்ப்பின் வாயிலாக இந்த நாவல் சென்றடைந்தது. இந்நாவல், தலித் மக்களின் புறக்கணிப்பு, வறுமை, மற்றும் தீவிர நோய்த்தொற்று போன்ற வெளிப்படையான துயரங்களை விவரிப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவர்களின் ஆழ்மனதில் ஊடுருவிய உணர்வுகளையும், ஏக்கங்களையும், போராட்டங்களையும் ஆழமாகப் பதிவு செய்கிறது. இந்த நாவல் மலையாளத்தில் தலித் வாழ்வை இலக்கியமாக்கியதில் முன்னோடிப் புனைவு. நவீன மலையாளப் புனைவெழுத்தில் அனல் காற்றைப் படரச் செய்த ஆரம்பக்காலப் படைப்புகளில் முக்கியமானது **"தோட்டியின் மகன்"**. இலக்கியத்தில் மட்டுமல்ல; சமூகப் பார்வையிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அதுவரை இலக்கியத்தில் யாரும் பார்க்காத களம்-சேரி; கேட்காத மொழி-பாமரக் கொச்சை; முகர அஞ்சிய வாடை-மலம்; வாழ்ந்திராத வாழ்வு — தோட்டிப் பிழைப்பு என்று பின்தள்ளப்பட்ட உலகைப் பொதுக் கவனத்துக்கு வைத்தது நாவல். சமூக அரங்கிலும் அரசியல் துறையிலும் அதன் மற்றொலிகள் எழுந்தன. பல விமர்சனங்கள் கூறப்பட்டாலும் இன்றும் தொடர்ந்து வாசிக்கப்பட்டுவரும் இந்த நாவலே மலையாளத்தில் தலித் வாழ்வை இலக்கியமாக்கியதில் முன்னோடிப் புனைவாகும்.

**தோட்டி என்பவன் யார்?**

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், தற்போது இருப்பது போல் பாதாளச் சாக்கடை திட்டம் எல்லாம் இல்லை. எனவே வீட்டில் உள்ள கழிவறையைச் சுத்தம் செய்யத் தினமும் காலை மண்வெட்டி, வாலி சகிதம் தோட்டி வருவான். நம் மலத்தைத் தன் வாளியில் அள்ளிக்கொண்டு, பீப்பாயில் சேர்ப்பான். வீடு வீடாகயேறி இந்த வேலையைத் தொடர்வான். பீப்பாய் நிரம்பி வழியும், ரோடில் சிந்தும். அதையும் எடுத்து, சேர்ந்து, மொத்தமாக ஊர் கோடியில் உள்ள மலக்கிடங்கில் சென்று கொட்டுவான். அவன் வீடும் கிடங்கின் அருகிலேயே தான் இருக்கும். படிக்கும் போதே, (மனதில்) எவ்வளவு அருவருப்பை ஏற்படுத்துகிறது? முகத்தில் ஒரு துர்நாற்றத்தின் சுளிப்பு தானாக வருகிறது. இப்படியொரு வகைப் பாட்டாளி மக்கள் வாழ்ந்துள்ளனர் என்று சொன்னால், முதலில் நம்பவே முடியவில்லை. ஆனாலும் சரித்திர உண்மை. இதில் கொடுமை என்னவென்றால். இவர்களைக் கீழ்த்தர அடிமைகளாக நடத்துவதும், மதிக்காமல் உதாசீனப் படுத்துவதும் வாடிக்கையாக இருந்துள்ளது. இவர்களின் சந்ததியும் இதே வேலையில் ஈடுபடுகிறது. ஒழுங்கான சம்பளம் கிடையாது. பாதியைத் தராமல் பிடுங்கும் ஓவர்சீயர். (இன்று போல) வந்ததைக் குடித்தே பழகிய தோட்டிகள். சாப்பாடு, சுகாதாரம், மரியாதை, அடிப்படை உரிமைகள் எல்லாம் எல்லாம் மறுக்கப்பட்ட தீண்டத் தகாத தலித் மனிதர்களின் வாழ்க்கைப் படம் தான் இந்த நாவல்.

**அச்சம்**

தோட்டிகள் தாழ்ந்தவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்ற சமூக மனப்பான்மையால், அவர்கள் பொது இடங்களில் ஒதுக்கப்படுகிறார்கள். ஊரின் ஒரு பகுதியில் ஒதுக்கப்பட்ட சேரியில் வாழ வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படுகிறது. சுடலைமுத்து, தனது மகன் மோகனைப் பெற்ற பிறகு அவனைத் தூக்கக்கூடத் தயங்குகிறான். ஒரு தோட்டியாகிய தான் தனது மகனைத் தொட்டால் அவனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்துவிடுமோ என்ற அச்சமும், சுய வெறுப்பும் அவனுக்குள் ஆழமாகப் பதிந்திருக்கிறது. இது, காலம் காலமாகச் சமூகத்தால் திணிக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மையின் உச்சக்கட்ட வெளிப்பாடு. மேலும் சுகாதாரமற்ற சூழலில் வாழும் தலித் மக்களுக்கு, காலரா, வைசூரி போன்ற நோய்கள் மரணப் பயத்தை உருவாக்குகின்றன. தொற்றுநோய்களால் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழப்பதும், தாங்களும் எப்போது வேண்டுமானாலும் இறக்கக்கூடும் என்ற அச்சமும் அவர்களின் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக உள்ளது.

தோட்டித் தொழிலில் கிடைக்கும் மிகக் குறைவான வருமானம், குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. நிரந்தர ஊதியம் இல்லாத நிலை, அதிகாரிகளின் லஞ்சம், மற்றும் பணப்பற்றாக்குறை ஆகியவை எதிர்காலம் குறித்த அச்சத்தை அவர்களுக்குள் விதைக்கின்றன.

**ஆசையும் நம்பிக்கையும்**

அவமானங்களும், வலிகளும் நிறைந்த வாழ்விலும், தோட்டிகளின் மனதில் நம்பிக்கைக்கான சிறு ஒளிக்கீற்று கனன்றுகொண்டே இருக்கிறது. சுடலைமுத்து தன் மகன் மோகன் நன்றாகப் படிக்க வேண்டும், தோட்டித் தொழிலை விட்டு வெளியே வர வேண்டும் என்று கனவு காண்கிறான். இந்த ஆசை, அடுத்த தலைமுறைக்காவது ஒரு மரியாதையான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற ஏக்கத்தின் வெளிப்பாடு. இருப்பினும், இத்தகைய கனவுகள் சமூக அமைப்புக்குள் செயல்படும் தடைகளால் சிதைக்கப்படுகின்றன. அரசியல்வாதிகள் மற்றும் ஆதிக்க வர்க்கத்தினரின் சுயநலப் போக்கால் ஏற்படும் ஏமாற்றங்கள், இந்த நம்பிக்கையின் மீது கருமையான நிழலைப் படரவிடுகின்றன.

தோட்டிகள் வாழும் பகுதியில் வாழாமல் அங்கிருந்து சற்று தள்ளித் தனக்கு என்று ஒரு தனி வீட்டில் வசிக்கின்றான் சுடலைமுத்து. தான் வேலைக்குப் போகும் வீட்டில் இருக்கும் மனிதர்களைக் கண்டு அவர்களைப் போல வாழ வேண்டும் என ஆசைப்படுகிறான். அதற்கு முதல்படியாக, தினமும் மற்ற தோட்டிகளைப் போல் அல்லாமல் நன்றாகக் குளித்து நேர்த்தியாகவும் தூய்மையாகவும் உடை உடுத்துகிறான். மேல்தட்டு மக்களைப் போலச் சிந்திக்க முயற்சி செய்கின்றான். பணத்தின் தேவையை எண்ணிச் சிறுகச் சிறுக சேமிக்கின்றான். தன்னுடன் வாழ வந்த மனைவியையும் இப்படித் தான் வாழ வேண்டும் என்று வற்புறுத்துகிறான். தோட்டிகள் அனைவரும் சாராயம் அருந்தும் பழக்கம் உடையவர்கள். ஆனால் சுடலைமுத்துவிடம் அப்பழக்கம் முற்றிலும் இல்லை. தனக்குப் பிறக்கும் குழந்தை தோட்டியின் மகனாக வளரக் கூடாது என்பதே அவனது வாழ்நாள் இலட்சியமாக இருக்கின்றது. தன் மகனுக்குப் பேர் வைக்கும் போதும் பலவித யோசனைக்குப் பின் மோகன் எனப்

பெயர் சூட்டுகின்றான். பல போராட்டங்களுக்குப் பிறகு தனது மகன் மோகனைப் பள்ளிக்கு அனுப்புகின்றான்.

**அப்பாக்களின் வேறுபட்ட ஆசை**

தகழி சிவசங்கரப்பிள்ளை இரண்டு அப்பாக்களை நமக்கு இந்தக் கதையில் காட்டுகிறார். முதல் அப்பா தான் பார்க்கும் இந்தத் தோட்டி வேலை எப்படியாவது தன் மகனுக்குக் கிடைத்துவிட வேண்டும் என்று அல்லாடுகிறார். அதுவே அவரின் கடைசி ஆசையாகவும் இருக்கிறது. இரண்டாவது அப்பா எக்காரணத்தைக் கொண்டும் தன் மகன் தோட்டியாகி விடக் கூடாது என்று நினைக்கிறார். அதற்காகப் பிரயத்தனப்படுகிறார். இரண்டு அப்பாக்களிடத்தும் மகனுக்கான பாசம் இருக்கிறது, அவன் எதிர்காலம்குறித்த கவலை இருக்கிறது, ஆனால் ஒன்று சமூகம் ஏற்கும் வகையிலும், இன்னொன்று சமூகத்தை எதிர்க்கும் வகையிலும்இருக்கிறது.

இரண்டாவது அப்பா சுடலைமுத்து. கழிவறை நாற்றமெடுக்காத வரையிலும் தன் இருப்பு குறித்த பிரக்ஞை சமூகத்திற்கு வராது என்பது தெரிந்த தோட்டியாகத் தன் வாழ்வைத் தொடங்குகிறான். தன் மகனின் சிறப்பான வருங்காலம் மட்டுமே இலட்சியம் என்று எண்ணி உழைக்கிறான். நகரத் தலைவரிடம் கொடுத்துக் காசு சேமிக்கிறான். சக தோட்டிகள் சங்கம் அமைக்கையில் ஓவர்சீயரின் லாபத்திற்காகக் கலைக்கும் பணியை ஏற்கிறான். தன் கூட்டத்தை விட்டு ஒதுங்குகிறான். தன் மகனுக்குத் தோட்டிகள் யாரும் வைத்திடாத பெயரைச் சூட்டுகிறான். **“மோகன் தோட்டியின் மகனாயிருக்கலாம்; ஆனால் மோகனின் மகன் ஒரு தோட்டியின் மகனாக இருக்கக்கூடாது.”** இது வெறும் **“வேலை மாற்றம்”** பற்றிய ஆசை அல்ல — அது ஒரு மனிதாபிமான எழுச்சி. அதற்குயேற்ப ஒரு நாள் தோட்டி தொழிலைக் கைவிட்டு மயானக் காவலன் ஆகிறான். தான் கண்ட கனவுகள் ஈடேறாது என்ற சுடும் நிஜத்தைச் சுமந்து தன் மகனும் தோட்டியாகத்தான் போகிறான் என்ற பாரத்தோடு செத்து மண்ணுக்குள் போகிறான். அவனுள் **“நான் தோட்டி ஆனேன், ஆனால் என் மகன் தோட்டி என்ற பெயரால் அவமானப்படக் கூடாது”** இந்த எண்ணம் தலித் சமூகத்தின் உள் வலியை மிக ஆழமாக வெளிப்படுத்துகிறது.

**கல்வி மறுக்கப்படும் நிலை**

கல்வி என்பது அனைவருக்கும் பொது என்பதைப் பின்பற்றாமல் தோட்டிகளுக்கு மறுக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. பெரும்பாலும் வருமானம் குறைவு என்ற போது அவர்களுக்குக் கல்வி என்பது எட்டாக் கனியாகவே இருந்துள்ளது. ஆனால் விடாமுயற்சியுடன் ஒருவன் தன் மகனைப் பள்ளியில் சேர்க்கலாம் என்றால் நிர்வாகத்தாரின் பதில் பள்ளியில் இடமில்லை, தோட்டியின் மகனுக்குக் கல்வியா என்பது போன்ற காரணங்களைக் கூறி நிராகரித்தனர். ஆனாலும் தனது விடாமுயற்சியால் பள்ளியில் தன் மகனுக்கு இடம் கடைத்தாலும் பெற்றோர்கள் பெயரில் வேறு தொழில் செய்பவர்களின் பெயர் தான் போட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். இதன்மூலம் அக்காலக் கட்டத்தில் தோட்டி மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

**கோபமும் எதிர்ப்புணர்வும்**

தொடர்ந்து துன்பங்களையும் சுரண்டல்களையும் சந்திக்கும் தலித் மக்களின் ஆழ்மனதில் கோபம் கனன்றுகொண்டே இருக்கிறது. இந்தக் கோபம், சில நேரங்களில் ஆதிக்க சக்திகளுக்கு எதிரான வெளிப்படையான போராட்டமாக வெளிப்படுகிறது. இருப்பினும், இத்தகைய போராட்டங்கள் பெரும்பாலும் வன்முறை மூலம் ஒடுக்கப்படுகின்றன. நாவலின் இளைய தலைமுறைக் கதாபாத்திரமான மோகனின் கதாபாத்திரம், இந்த உணர்வுகளின் ஒரு வலுவான பிரதிபலிப்பு. அவனது கோபம், தனிப்பட்ட கௌரவத்தை நிலைநாட்டவும், சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது. மோகனின் இந்த எதிர்ப்புணர்வு, சமூக அநீதிக்கு எதிராகத் தலித் மக்களின் ஆழ்மனதில் கொதிக்கும் நெருப்பைக் குறிக்கிறது.

நாவலின் முதன்மைப் பாத்திரமான சுடலைமுத்து, சமூகத்தால் விதிக்கப்பட்ட இழிவான தொழிலிலிருந்து தன் மகன் மோகனைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆழமான கோபத்தை அனுபவிக்கிறான். அந்தச் சமூகச் சூழல் ஒரு தோட்டிக்கு வேறு வழியில்லை என்பதை அவன் அறிந்திருந்தாலும், தன் மகனின் கௌரவத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம், அவனுக்குள் ஒரு நிசப்தமான போரை நிகழ்த்துகிறது. இந்த உள்மனப் போராட்டம், சமூக அடக்குமுறைக்கு எதிரான அமைதியான எதிர்ப்பின் ஒரு வடிவமே. ஒரு தோட்டியாகப் பிறப்பது ஒரு தீர்ப்பைப் போன்றது என்பதை சுடலைமுத்து உணர்கிறான். அதனால், தோட்டி என்ற அடையாளத்திலிருந்து விடுபட, தன் மகனுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை அமைத்துத் தர முயல்கிறான். அவனுடைய இந்த முயற்சி, சமூகத்தின் பாகுபாட்டுக்கு எதிரான அவனது மனப் போராட்டத்தையும், கோபத்தையும் காட்டுகிறது.

சுடலைமுத்தும் அவனது சக தோழர்களும், தங்கள் தொழிலில் நியாயமான ஊதியத்தையும், அடிப்படை உரிமைகளையும் பெறத் தொழிற்சங்கம் அமைக்க முயல்கிறார்கள். இந்த முயற்சி, தங்கள் மீதான சுரண்டலுக்கு எதிரான வெளிப்படையான எதிர்ப்புணர்வின் உச்சக்கட்ட வெளிப்பாடு. எனினும், ஆதிக்க சக்திகளாலும், தங்கள் சமூகத்திற்குள் இருக்கும் துரோகிகளாலும் இந்த முயற்சி முறியடிக்கப்படுகிறது.

மூன்றாம் தலைமுறைத் தோட்டியான மோகன், தன் தந்தையைப் போல் அமைதியாகச் செயல்படாமல், அடக்குமுறைக்கு எதிராக நேரடியாகப் போராடுகிறான். தனது கௌரவத்தையும், சக தோழர்களின் நலனையும் பாதுகாக்க, அவன் வெளிப்படையாக முரண்படுகிறான். அவனுடைய இந்தக் கதாபாத்திரம், ஒடுக்கப்பட்ட சமூகத்தினரிடையே உருவாகும் புதிய விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

சுயநலத்தால் திசைதிருப்பப்பட்ட கோபம்.

**பொருளாதார மோசடி**

சுடலைமுத்து தான் சம்பாதித்த காசை சேர்த்து வைத்து நிலமும் வீடும் வாங்க வேண்டும் என்ற ஆசைப்படுகிறான். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் சொற்பப் பணமே அவர்கள் செய்யும்

தொழிலுக்கு ஏற்ற வருமானம் இல்லை. மேலதிகாரிகள் வேலையை மட்டும் வாங்கிக் கொண்டு 5 ரூபாய் மட்டுமே சம்பளமாக வழங்குவதை அறியமுடிகின்றது. அதிலிருந்து மீண்டு வந்தவன் சுடலைமுத்து. தான் சம்பாதித்ததை முனிசிபல் சேர்மேனிடம் கொடுத்து வைத்தான். அவரும் உனக்குத் தேவைப்படும் போது உனக்குத் தருகிறேன் என்றார். ஆனால், அவர் ஏமாற்றினாரா அல்லது அவரிடம் இருக்கும் பணத்தைச் சுடலை கேட்கும்போதே வேண்டுமென்றே இல்லையென்றாரா என்று ஆராய்ந்தால், அதற்கான விடை மோகன் அவர் வீட்டைக் கொழுத்தியபோது எழுந்த தீயின் அனலில் புரிந்தது.

**நிறைவாக**

தகழி சிவசங்கரப் பிள்ளையின் **'தோட்டியின் மகன்'** நாவல், தலித் மக்களின் துன்பியல் வாழ்வை மட்டுமல்ல, அவர்களின் ஆழ்மன உணர்வுப் போராட்டங்களையும், ஏக்கங்களையும், நம்பிக்கைகளையும் பதிவு செய்கிறது. அவர்களின் தாழ்வு மனப்பான்மை, அச்சம், கோபம், மற்றும் அடுத்த தலைமுறைக்கான ஏக்கம் ஆகிய உணர்வுகள், ஒரு சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக எழும் மனித உணர்வுகளின் ஆழமான வெளிப்பாடாக அமைகின்றன. இந்த நாவல், இலக்கியப் பரப்பில் தலித் மக்களின் உணர்வுகளையும், சமூக அவலங்களையும் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. கோபத்தையும் எதிர்ப்புணர்வையும் வெறும் உணர்ச்சிகளாக மட்டும் காட்டவில்லை. அவை, தோட்டி சமூகத்தின் வாழ்க்கையில் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாக இருப்பதைக் காட்டுகிறது. இந்தப் போராட்டங்களின் வெற்றி, அவர்களின் ஒற்றுமையிலும், விழிப்புணர்விலும் அடங்கியிருக்கிறது என்ற செய்தியையும் நாவல் உணர்த்துகிறது. சுடலைமுத்துவின் அமைதியான ஏக்கம், மோகனின் வெளிப்படையான எதிர்ப்பு, மற்றும் சிலரின் சுயநலப் போக்கு ஆகிய அனைத்தும் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த உணர்வுநிலையைச் சித்திரிக்கின்றன.

**துணைநின்ற நூல்கள் மற்றும் இணையதளங்கள்**


1. **சுந்தர ராமசாமி (மொ.பெ.), *தோட்டியின் மகன்* (தமிழ், காலச்சுவடு பதிப்பகம்)**
2. **ப.பானுப்பிரியா, "'தோட்டியின் மகன்' நாவலில் தலித் மக்களின் வாழ்வியல் சிக்கல்கள்"** சான்லாக்ஸ் கட்டுரை
3. ***Vimarsanam Web*, "தோட்டியின் மகன்" (விமர்சனம்):** சுந்தர ராமசாமியின் மொழிபெயர்ப்பின் தரம், நாவலின் கதைக்களம்.
4. ***ABP Tamil*, "*Book Review* : தொடரும் மலக்குழி மரணங்கள்.. 'தோட்டியின் மகன்' நாவல் வழி நெஞ்சைத் துளைக்கும் உண்மைகள்!" (விமர்சனம்)**
5. **தமிழ் விக்கிப்பீடியா, "தகழி சிவசங்கரப் பிள்ளை"**

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com